DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# MCOP. No. 57/2020

Deposition of Witness : PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பொன்ராஜ் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | மாரிச்சாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2024.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**2 வது எ.ம.கு.வி.:**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | உங்களுக்கு நீதிமன்ற அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால்? |
| பதில் | : | இல்லை |
| கேள்வி | : | நீங்கள் காவல் நிலையத்தில் விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்தீர்களா என்றால்? |
| பதில் | : | கொடுத்தேன். |
| கேள்வி | : | நீங்கள் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் ஏனென்றால் உங்கள் வாகனத்தின் முன்பும் அதற்கு முன்பும் சென்ற லாரி எந்த வேகத்தில் சென்றதது என்றும் அந்த லாரிக்கும் உங்கள் முன்பாக சென்ற இரு சக்கர வாகனத்திற்கும் இடையே என்ன இடைவெளி இருந்தது என்பது உங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | உங்கள் வாகனத்தின் முன்பு செல்லக்கூடிய வாகனத்தை தான் உங்களால் கவனிக்க முடியும் உங்கள் வாகனத்திற்கும் முன் சென்ற வாகனத்திற்கும் முன்னால் எத்தனை வாகனங்கள் சென்றது பற்றி தெரியாது என்றாலும் விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கமால் |

| | | |
|---|---|---|
| | | இழப்பீட்டிற்காக பொய் புகார் கொடுத்தீர்கள் என்றால் ? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | உங்கள் வாகனத்திற்கு முன் சென்ற நபர்கள் தலைக்கவசம் அணிந்திருந்தார்கள் என்று புகாரில் சொல்லவில்லை என்றால்? |
| பதில் | : | எனக்கு தெரியாது. |
| கேள்வி | : | உங்கள் வாகனத்திற்கு முன் சென்ற இரு சக்கர வாகனத்திற்கும் முன் சென்ற லாரி ஓட்டுநர் கவனமாகவும் நிதான வேகத்துடனும் சென்றார் என்றால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | உங்கள் வாகனத்திற்கு முன் சென்ற இரு சக்கர வாகன ஓட்டுநர் தான் தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் சென்றதால் தான் விபத்து நடந்தது என்றால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | இந்த விபத்து சம்பந்தமாக மாஜிஸ்திரெட் நீதிமன்றம் முன்பு உங்களை விசாரித்தார்களா என்றால்? |
| பதில் | : | இல்லை |

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.03.2024 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2024.03.19 18:34:33 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
19.03.2024.

DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# MCOP. No. 57/2020

Deposition of Witness : PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கருப்பையா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | | பூச்சி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2024.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)

<u>முதல் விசாரணை</u>

நான் இத்துடன் எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனது சொந்த அறிவிற்கு உட்பட்டது.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2 வது எ.ம.கு.வி.:</u>**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | உங்களுக்கு நீதிமன்ற அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால்? |
| பதில் | : | இல்லை |
| கேள்வி | : | நீங்கள் இறந்து போன சுருளிராஜனை நன்கு தெரியும் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | விபத்தில் இறந்து போன சுருளிராஜ் காய்கறி தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து மொத்த வியாபாரம் செய்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் |

| | | |
|---|---|---|
| | | எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | நீங்கள் காய்கறி சில்லறை விற்பனை செய்து வருகிறேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | இறந்து போன சுருளிராஜ்க்கு நாள் ஒன்றுக்கு ரூ 500 முதல் 800 வரை கிடைக்கும் என்றும் மற்றும் மொத்த காய்கறி வியாபாரத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ 2000 கிடைக்கும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | நீங்கள் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் பொய்யாக மனுதாரருக்கு அதிகபடியாக நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றும் உங்கள் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால்? |
| பதில் | : | சரியல்ல |

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.03.2024 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.03.19 18:34:40 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
19.03.2024.